பாதுகாவலன்
PATHUKAVALAN
மலர்: 121 24—03—1995
இதழ்: 6 விலை ரூபா 5-00

"புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக"
## தேசிய மேய்ப்புப் பணி மாநாடு
கொழும்பில்
1995
ஏப்ரல் 19ஆம் — 23ஆம் திகதிகளில்
இடம் பெறும்.
யாழ் மறைமாவட்டத்திலிருந்து: 10 குருக்களும்
19 பொது நிலை விசுவாசிகளும் இதில்பங்குபற்றுவர்.

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

குடும்ப வளத்துணை நிலையத் திறப்பு விழா

# குடும்ப அப்போஸ்தலத்துவம் பொதுநிலையினரின் சிறப்புப் பணி

**குடும்ப அப்போஸ்தலத்துவம் குடும்பங்கள் குடும்பங்களுக்கு செய்கின்ற உன்னத பணியாகும். இப்பணி போரின் நிகழ்வுகளின் தடைகளைக் கடந்து, புத்துயிர் பெற்று, எமது மக்களின் குடும்பங்களின் முழு ஆளுமை வளர்ச்சிக்கு உதவும், என்று யாழ் ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த 16-03-95 அன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட "அகவொளி" என்ற குடும்ப வளத்துணை நிலையத்தின் திறப்பு விழாவில் ஆசியுரை வழங்கும் போது குறிப்பிட்டார்.**

அவர் மேலும் பேசுகையில், "எமது மறைமாவட்டத்தில் இக் குடும்ப வளத்துணைப் பணியானது பல ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்துள்ளது. ஆயினும், கடந்த சில ஆண்டுகளாக போரின் நிகழ்வுகளில் இப்பணியில் தடங்கல்கள் பல ஏற்பட்டு, செயற்பாடுகள் அருகிய நிலையிற் காணப்பட்டது. ஆனால் அண்மைக்காலங்களில் அவை மீண்டும் புத்துயிர் பெற்று அருள்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

போர்க் கைதிகள் விடுதலை

## அறப்போராட்டத்தில் நம்பிக்கை

அறப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் இலங்கை அரசாங்கத்திடம் தமது விடுதலையைக் கோரி 17 நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்ட 18 போர் கைதிகளையும், இலங்கை அரசாங்கம் எவ்வித நடவடிக்கை எடுக்காத போதிலும், ஒரு தலைப்பட்சமாக எதுவித நிபந்தனையுமின்றி மனித அபிமான முறையில் கடந்த சனி (18.3.95) அன்று விடுதலை செய்துள்ளார்.

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். மாவட்ட தென்னிந்திய திருச்சபை ஆயர் S. ஜெபநேசன், முன்னாள் ஆயர் அம்பலவாணர் ஆகியோரும் ஒன்றிணைந்து போர்க்கைதிகளின் விடுதலையை முன்னிட்டு தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களை விண்ணப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தீவுப்பகுதிகளில் யாழ் ஆயர்

இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் இளவாலை, ஊர்காவாற்துறை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களிலுள்ள தனது மந்தைகளைத் தேடி யாழ் ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை தவக்கால மேய்ப்புப்பணி விஜய மொன்றை மேற்கொண்டுள்ளார். கடந்த திங்கட்கிழமை 20-3-95 மாலை பருத்தித்துறை கடல் மார்க்கமாக தனது பயணத்தைத் தொடங்கிய ஆயருடன் யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலைய இயக்குநர் அருள்திரு S. H. ஜெபநேசன் அடிகளாரும், தற்காலிகமாக

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

திருமலை-மட்டுநகர் ஆயரின்

## தவக்கால சுற்றுமடல்

(சுற்றுமடலின் ஒரு சில பகுதிகள் : பார்க்க பக்கம் 6)

"தவக்காலம் என்பது ஜெருசலேமையும், திருச்சிலுவையையும் நோக்கிப் புறப்படும் பாஸ்காப் பயணமாகும் (மத். 20:19-28).

நாம் எமது வாழ்வில் மீண்டும் விசுவாசப்பணியின் முக்கிய அம்சங்களான பகிர்தல், செபித்தல், ஒறுத்தல் ஆகியவற்றை இறை அன்பிற்காகச் செயற்படுத்த முன்வருவோம்." இவ்வாறு திருமலை—மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இறைமக்களுக்கு எழுதிய தவக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் )

கத்தோலிக்க ஆசிரியர்

## தவக்கால ஞானொடுக்கம்

யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருள்திரு. R. H. சகாயநாயகம் அடிகளாரால் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கென ஒழுங்கு செய்யப்பெற்ற வருடாந்த தவக்கால ஞானொடுக்கம் கடந்த வியாழன் 16.03.95 அன்று மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதில் இருநூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இதனை அருள்திரு. P. யேசுநேசன் o.m.i அடிகளார் நெறிப்படுத்தினார்.

## வெளிவாரிக் கிறிஸ்தவ மாணவர்க்கான கருத்தரங்கு

வெளிவாரிக் கிறிஸ்தவ மாணவ ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று 27-02-95 காலை 9.00 – மாலை 4.00 மணி வரை, யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. கிறிஸ்தவ நாகரீகத்தின் பல்வேறு அம்சங்கள் இக்கருத்தரங்கில் இடம்பெற்றது. வெளிவாரிக் கிறிஸ்தவ மாணவர்களுக்கு இக்கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. அருள்திரு. A. J. V. சந்திரகாந்தன், அருள்திரு. G. V. பிலேந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

மேலும் இதுபோன்ற பல கருத்தரங்குகளை நடாத்துவதற்கு ஒன்றியம் தீர்மானித்துள்ளது. வெளிவாரிக்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## யாழ் ஆயரின் வேண்டுகோள்

நாட்டில் நிலையான சமாதானம் உருவாக வழிவகுக்க தொடர்ந்து உத்வேகத்துடன் இறைவனிடம் பிரார்த்திக்குமாறு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மக்களைக் கேட்டுக்கொள்கின்றார்.

சகல கோயில்களிலும் நாளாந்த திருப்பலியில் இறைமக்கள் ஒன்றிணைந்து நாட்டின் அமைதிக்கான செபத்தைத் தொடர்ந்து சொல்லுமாறு ஆயர் அவர்கள் பணித்துள்ளார்.

## திருநாள் வாழ்த்துக்கள்

19—03—1895

திருமலை மட்டுநகர் ஆயர்
யோசவ் கிங்ஸ்லி
சுவாம்பிள்ளை
ஆண்டகை

மன்னார் ஆயர்
இராயப்பு யோசவ்
ஆண்டகை





இகபர நலன்கள் பெற்று, சுக நலம் பெருகி
நற்பணிபுரிய வாழ்த்துகிறோம்!!

## பசறைப் பங்கில் திருப்பாலத்துவ சபைத் திருநாள்

கடந்த 26–02-1995 இல் பசறை பங்கின் புனிதயூதா ததேயு ஆலயத்தில் காலை 9மணியளவில் திருப்பாலத்துவ சபையின் திருநாள் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவிற்கு மறைமாவட்ட ஆயர் எட்மன் ஆண்டகையும், பதுளை மறைமாவட்ட திருப்பாலத்துவ சபையின் இயக்குனரும் பசறை பங்கின் பங்குத்தந்தையுமான வண பிதா மார்சல் M.இராஜநாயகம் அடிகளாரும் சேர்ந்து திருப்பலிப் பூசையை நிறைவேற்றினார்கள்.

சிறுவர்கள் சிறிய விசயங்களில் முன்மாதிரியாக இருந்து தாங்கள் பெற்ற நற்செய்தியை தங்களது ஏனைய பிள்ளைகளோடு பகிர்ந்து வாழவேண்டும் என்றும் குழந்தைகளின் உள்ளத்தில் எழும் எண்ணக் கருத்துக்களை அவர்களுடைய முகங்களில் காணக்கூடியதாக ஊக்குவிப்பாளர்கள் செயல்படவேண்டுமெனவும் ஆயர் மறையுரையில் கூறினார்.

தொடர்ந்து திருப்பலி பூசையின் பின் கலைநிகழ்ச்சிகளும்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## புதுக்குடியிருப்பில் பலிக்களம்

புதுக்குடியிருப்பு – முல்லை பங்கு கலைஞர்களால், யாழ் திருமறைக் கலா மன்றத்தின் ஆதரவில் எதிர்வரும் வெள்ளி 31-3-1995 அன்று மாலை7-30 மணிக்கு "பலிக்களம்" எனும் ஆண்டவரின் திருப்பாடுகளின் காட்சி, புதுக்குடியிருப்பு றோ. க. பாடசாலை மைதானத்தில் மேடையேறுகிறது.

புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை. அருள்திரு F. L. N, குரூஸ் o. m. i. அடிகளாரின

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## எம்கருத்து

# இருமன உடன்படிக்கை

இருமனம் ஒன்று சேர்ந்து திருமணம் ஆகின்றது. திருமணம் ஓர் ஒப்பந்தம். நல் மனம் படைத்த இருவருக்கிடையில் உண்டாகும் ஓர் உடன்படிக்கை. ஒன்றைச் செய்வதாகவோ, செய்யாமல் இருப்பதாகவோ இருவர் கொடுக்கும் ஓர் உறுதிமொழி. இவ்வாறு உடன்படிக்கை செய்பவர் இருவரும் உடன்படிக்கையின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆகிறார்கள்.

ஓர் ஆணும், ஒரு பெண்ணும் ஒருவர் ஒருவரைத் தங்கள் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்வது திருமண உடன்படிக்கை. இன்பத்திலும் துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாயிருந்து, வாழ்நாளெல்லாம் ஒருவரை ஒருவர் நேசிக்கவும் மதிக்கவும் வாக்களிப்பது இவர்களின் உடன்படிக்கை.

இவ்வுடன்படிக்கையால் இருவரும் ஓர் குடும்பமாகி பிரியாது வாழவேண்டும். மனித சக்தியால் இவ்வுடன்படிக்கையை உடைக்க முடியாது. ''இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' என்று இறைவனே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இறைவனின் படைப்புத் திட்டத்தில் குடும்பத்திற்குரிய பங்கு தனிப்பட்டது. இறைவன் ஆணும் பெண்ணுமாக மனிதனைப் படைத்து தன்னுடைய முப்பணிகளிலும் பங்களித்துள்ளார். தன்னுடைய சாயலாக மனிதனைப் படைத்த இறைவனின் வல்லமையில் பங்கு கொடுத்து அவருடைய சாயலாகவே மக்களைப் பெற்றெடுக்கும் பெருமைவாய்ந்த நிறுவனம் ஒரு குடும்பம். அஃது இறையன்பை நிறைவாகத் தரும் ஒரு நிறுவனமும் ஆகும்.

திருமணம் ஒரு மங்கள நிகழ்ச்சி. மகிழ்ச்சி உணர்வுகளுடன் களிநடனம் புரியும் இன்பத் திருமேடை.

யோர்தான் நதி திருமுழுக்கின்பின் இயேசு தன் முதல் சீடர்களுடன் கலந்துகொண்ட முதல் சமூக நிகழ்ச்சி கானாவூர் திருமணம். நமது மீட்பர் இயேசுவும் அவரது அன்னையும் வருகைதந்து மணமக்களை நேரில் வாழ்த்திய காரணத்தால் கானாவூர்த் திருமணம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. மேலும் நற்செய்தியைப் போதிக்கவும், தியாகத்திற்கும் சிலுவையின் பாதைகளுக்கும் நம்மை அழைக்கவும் வந்த இயேசு, சமூக நிகழ்ச்சிக்கு உதவுவதன் மூலம் தன் பகிரங்க வாழ்க்கையைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது,

கானாவூர் கலியாணம் போல் ஒவ்வொரு கிறிஸ்துவத் திருமணமும் அருள்வள மீந்து அர்ச்சிக்கும் ஓர் அருள்சாதனம். இறைவன் திருமுன்னும் இறை மக்கள் முன்னிலையிலும் தங்களையே வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்ட தம்பதிகள் ஒருவருக்கொருவர் என்றும் பிரமாணிக்கமாயிருக்கவும், திருமணத்தின் ஏனைய கடமைகளை ஏற்று நிறைவேற்றவும் ஆற்றல் பெறுகின்றனர்.

திருமணத்தின் கடமைகளை நிறைவேற்றுவதில் கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவரை புனிதப் படுத்துகின்றனர். திருமணச் செயல்கள் இறைவனின் வல்லமையால் அர்ச்சிக்கும் ஆற்றல் பெறுகின்றன. கணவன் தந்தையாகவும்,மனைவி தாயாகவும் உயர்த்தப் படுகின்றனர். இவ்வுயர்வில் இவர்களுடைய திருமணம் நிறைவடைந்து புனிதம் பெறுகின்றது.

கிறிஸ்துவத் திருமணம் பிதா, சுதன், தூய ஆவியாகிய மூவருக்கும் இடையே விளங்குகின்ற அன்பு, ஒற்றுமை, ஐக்கியம் ஆகியவைகளைக் குறித்துக் காட்டுகின்றது. தம திரித்துவத்தில் மூன்று அங்கத்தினர் இருப்பதுபோல, குடும்பத்திலும் தாய், தந்தை, பிள்ளைகள் என்ற மூன்று வித அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். எப்படி பிதாவை விட்டு சுதனையும் தூய ஆவியையும் பிரிக்க முடியாதோ, அதேபோல குடும்பத்திலும் கணவனை விட்டு மனைவியையும், மனைவியை விட்டுக் கணவனையும் பிரிக்க முடியாது.

மணமகனுக்கும் மணமங்கைக்கும் உள்ள உறவு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவைக் குறித்துக் காட்டுகிறது. கிறிஸ்து திருச்சபையை முழுமையாக நேசித்து அதற்காகத் தம்மையே கையளித்த தியாகத்தைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்க தம்பதிகள் அழைக்கப் படுகின்றனர்.

திருமணத்தின் பண்புகள் கிறிஸ்துவ குடும்பங்களில் மங்கி மறைந்து வரும் இக்காலத்தில் 'யாழ் மறைமாவட்ட குடும்பவளத்துணை நிலையம்' அகவொளியூட்டி மனநிறைவளிக்கும் சக்தி வாய்ந்த பீடமாகத் திகழ வாழ்த்துகிறோம்.

# 2000 யூபிலி ஆண்டு உடனடி ஆயத்தம்

(சென்ற இதழ் தொர்ச்சி)

**b) இரண்டாம் கட்டம்.**

39. விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்த மாபெரும் திட்டத்தின் அடிப்படையில் கண்டிப்பான ஆயத்த கட்டமான இரண்டாம் கட்டத்தை நாம் ஆரம்பிக்கலாம்.

இது 1997க்கும் 1999க்கும் இடைப்பட்ட மூன்று ஆண்டுகளில் நிகழும். மனுவுரு வெடுத்த இறைமகனான கிறிஸ்துவை மையமாகக் கொண்ட இந்த மூன்றாண்டு காலத்தின் ஆய்வுப் பொருள் அமைப்பு இறையியல் சார்ந்ததாக இருப்பது அவசியம். ஆகவே அது மூவொரு கடவுள் கொள்கை சார்ந்தது,

**முதல் ஆண்டு — இயேசு கிறிஸ்து**

40. ஆகவே முதல் ஆண்டாகிய 1997, தூய ஆவியின் வல்லமையால் மனுவுரு வெடுத்த இறை வார்த்தையான கிறிஸ்துவை சிந்தனை செய்வதற்கென ஒதுக்கப்படும். இந்த யூபிலியின் தனிச் சிறப்பான கிறிஸ்து இயல் பண்பு வலியுறுத்தப்பட வேண்டும். ஏனெனில் சகல மக்களதும் மீட்பின் மறைபொருளான இறைமகனின் மனித அவதாரத்தையும், பிறப்பையும் அது கொண்டாடுகின்றது. அநேக கருதினால்மாரும், ஆயர்களும் இவ்வாண்டுக்கெனமுன்வைத்த பொதுக் கருத்து ''நேற்றும், இன்றும்,என்றென்றும் உலகின் ஒரே மீட்பர் இயேசுக் கிறிஸ்துவே ''(எபி 13: 8) என்பதாகும்.

பேரவையில் எடுத்துரைக்கப்பட்ட கிறிஸ்து இயல் ஆய்வுப் பொருள்களுள் பின்வருவன முனைப்பானவை:

— கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிப்புப் பணியும் யூபிலியின் ஆய்வுப் பொருளும் பின்னிப் பிணைந்துள்ள லூக்காஸ் நற்செய்தியின் 4 ஆம் அதிகாரத்தை குறிப்பாகத் துணைகொண்டு மீட்பரும் நற்செய்திப் போதகருமான கிறிஸ்துவை மீண்டும் உணர்ந்து போற்றுதல்,

— இயேசு கன்னி மரியாளிடத்தில் மனுவுரு எடுத்து பிறந்த மறைபொருளை ஆழமான விதத்தில் உணர்ந்து கொள்ளுதல்

— மீட்புப்பெற கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் அவசுயம்.

கிறிஸ்து உண்மையில் யாரென்று அறிந்து கொள்ள கிறிஸ்தவர்கள், முக்கியமாக இந்த ஆண்டிலே, புத்தார்வத்துடன் வேதாகமத்தை அணுக வேண்டும். இறைவார்த்தையால் வளமூட்டப்பட்ட திரு வழிபாட்டின் மூலமாகவோ பக்தியுடன் கூடிய வாசினையின் மூலமாகவோ, இந்நோக்கத்திற்கேற்ப அமைந்த கற்பித்தல் சாதனங்களின் மூலமாகவோ இதைச் செய்யலாம். திருவெளிப்பாட்டிலே பரலோக தந்தை தாமே அன்போடு எம் நடுவில் வந்து, தமது ஒரே மகனின் இயல்புபற்றியும் மனுக்குலத்திற்கான அவரது மீட்புத் திட்டம் பற்றியும் வெளிப்படுத்துகின்றார்.

41. "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லோரும் அவரை அணிந்து கொண்டீர்கள்'' (கலா.3: 27) என்ற அப்போஸ்தலரின் வார்த்தைப்படி, முன்னர் கூறியுள்ளதுபோல், இவ்வாண்டில் மீட்பின் மறைபொருளை அருள்சாதன முறையில் பிரசன்னமாக்குவதில் நாம் கொண்டுள்ள கடப்பாடு, திருமுழுக்கை கிறிஸ்தவ வாழ்வில் அடிப்படையாகப் போற்றுவதற்கு வழி செய்யும்.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் திருமுழுக்கானது "கத்தோலிக்க திருச்சபையுடன் முழு ஐக்கியம் கொண்டிராதவர்கள் உட்பட சகல கிறிஸ்தவர்களிடையிலும் ஐக்கியத்தின் அத்திவாரமாக இருக்கிறது" எனக் கூறுகின்றது.

கிறிஸ்தவ ஒன்றிப்பு நோக்கில், ஒரே ஆண்டவரான கிறிஸ்துவை ஒருமித்து நோக்கி, அவர் பிதாவிடம் செபித்தது போல அவரில் நாம் ஒன்றுபட வேண்டுமென்ற கடப்பாட்டு நிலையை ஆழமாக்க இவ்வாண்டு மிக முக்கியமானதாகும்.

கிறிஸ்துவின் மையநிலை, இறைவார்த்தை, விசுவாசம் ஆகியவற்றை வற்புறுத்துவது ஏனைய சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவரிடையே ஆர்வத்தைத் தூண்டி அவர்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலைப் பெற வழிசெய்யக்கூடும்.

(வளரும்)

## யார் இவர்?

பொய் என்று தெரிந்து கொண்டே
சத்தியம் செய்பவன்;
கள்ளத்தில் பூத்த மலர்; கபடத்தில் புழுத்த புழு;
வெள்ளத்தில் வந்த குப்பை அவன்—
**வேஷத்தில் வாழும் மனிதன்**

● R அதிதி

## மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 27. பயனும் வழியும்

1. மனிதவாழ்வில் இன்று எண்ணிறைந்த இலக்குகள். இந்த இலக்குகளிடை தரநிலைகள் — இவற்றினை எட்டுவதற்கான வழி முறைகளும் வேறுபடுவன.

மரபுவழிச் சமூகவாழ்வில், பயன் இலக்குகளோ, அன்றி அவற்றினை எய்துதற்கான வழி முறைகளோ அதிகம் இருந்ததில்லை. இதனால் முரண் நிலைகளும் அதிகமில்லை.

2. நவீன வாழ்வில் இலக்குகளின் அருமை காரணமாகவும் எப்படியாவது பயனை கண்டால் சரி என்ற போக்கினாலும், வழிமுறை பற்றிய உணர்வு இன்று பெரிதும் அருகிப்போதல் அவதானிக்கப்படும்.

நவீன சிந்தனை — நவ இலக்குகள் தொடர்பாக — புதிய புதிய வழிமுறைகள் தேடப்படுவது இயல்பானதுதான்.

ஆனால் இந்த வழிமுறைகள், வழிப்பறிகளாகவோ, வழிப்பிறழல்களாகவோ அமையாமல் எச்சரிக்கையாக இருப்பதும் அவசியம் —

3. நடைமுறைவாழ்வில்,மரபுவழி இலக்குகளை எய்துவதற்கே வழிமுறைகளில் நவீன பாணிகளை நம்மவர்கள் கையாளுகின்ற நிலைமை சிறப்பான எமது கவனத்திற்குரியதாகின்றது. உதாரணத்திற்கு தூரப்போவானேன் — திருமணம் — அதிலும் பெரியோர்பேசிச் செய்துவைக்கும் திருமணம், தாலியும் கட்டித்தான். அது சுவிஸிலும் நடக்கலாம் — கனடாவிலும் நடக்கலாம். தாலி கட்டாயம் கட்டப்படும், ஆனால் வழிமுறை; வழியில் நடப்பவைபற்றி, நாம் அலட்டிக்கொள்வதில்லை.

இன்றைய போட்டிச் சமூக வாழ்விடை, நாம் வழிபிறளும் பாதைகள் பல — இதனால் நாம் கண்ட பயன் சுகங்களும் கூட பெரும்பாலும் நிலைப்பதில்லை.

பயனும் வழியும் சீராய் அமையும்படி வாழும் வாழ்க்கையினால்தான் எமது வாழ்வையும், எங்கள் சமூக வாழ்வையும் மேம்படுத்த முடியும்.

எழுத்தாளர்களே!

ஈஸ்ரர் சிறப்பிதழுக்கான கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றிய உங்கள் ஆக்கங்களை ஒரு தாளில் ஒருபக்கத்தில்150 சொற்களுக்கு மேற்படாமல் எழுதி 30-3-95ற்கு முன்பாக எமக்கு அனுப்பிவையுங்கள்.

(ஆ-ர்)

## யாழ் மறைமாவட்ட குடும்பவளத் துணை நிலையத்தின்

# 1993-1995 ஆண்டுகளுக்கான பணி அறிக்கை

குடும்பவளத் துணை நிலையத்தின் இயக்குநர் அருள்திரு S. J. இராசநாயகம் அடிகளார் 'அகவொளி' திறப்புவிழாவன்று (16-03-95) சமர்ப்பித்த பணி அறிக்கையிலிருந்து சில பகுதிகள்.

எமது யாழ். திருச்சபை 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி முதன் முறையாகத் திருமண ஆயத்தப் பயிற்சி நெறியைத் தொடங்கியது. இதை யாழ். ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் அன்றைய தினம் தொடக்கி வைத்தார்.

திருமணம் பற்றிய அறிவுரைகள் வழங்குவதும், மகிழ்ச்சியான குடும்ப வாழ்வுக்கு வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் கூறுவதும் திருமண ஆயத்தப்பயிற்சி நெறியின் நோக்கமாகும்.

## திருமண ஆயத்தப் பயிற்சிநெறி

இன்று உலகியல் ரீதியில் ஒவ்வொரு துறையிலும் பணி புரிகின்றவர்கள் அவ்வத்துறையில் பயிற்சி பெற்று ஓரளவு நிபுணத்துவம் பெற்று பணியாற்றுகின்றார்கள், ஆனால் ஆயிரங்காலத்துப்பயிரான திருமண வாழ்வை மேற்கொள்பவர்கள் எதுவித பயிற்சிகளும் இல்லாது திருமண வாழ்வுக்குள் புகுவது பெரும் குறைபாடாக இருந்தது. திருமணப் பந்தத்தில் நுழைவோர் திருமணம்பற்றிய தெளிந்த அறிவு இல்லாமலே திருமண வாழ்வைத் தொடங்குவதால் எத்தனையோ குடும்பங்கள் சீரழியும் நிலையில் இருப்பதைக் காண்கிறோம். குடும்பங்களில் வீண்சந்தேகம், பிரிவு, சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. தேவையான திருமண முன் தயாரிப்பு இல்லாமையே இவற்றுக்குக் காரணம். எமது குடும்ப வளத்துணை நிலையம் இந்தக் குறையைக் கடந்த ஒரு வருட காலத்திற்கு மேலாக திருமண ஆயத்தப் பயிற்சிநெறி மூலம் நிவர்த்தி செய்ய தொடங்கியுள்ளது. எமது நிலையம் கடந்த 15 மாதங்களாக 493 இளைஞர், யுவதிகளை திருமணத்திற்கு ஆயத்தம் செய்து, வேண்டிய பயிற்சி அளித்து, அவர்கள் திருமண வாழ்வில் புக உதவி செய்துள்ளது. இத்திருமண ஆயத்தப் பயிற்சி நெறியானது உடல், உள, சமூக, ஆன்மீக ரீதியாக வழங்கப்படுகின்றது. இது ஒவ்வொரு மாதமும் கடைசி சனி, ஞாயிறு கிழமைகளில் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

## இயற்கை முறை குடும்பத் திட்டமிடல்

இன்றைய சூழ்நிலையில் பொருளாதாரப் பிரச்சனையால் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவோர் பலவித வழிகளை நாடுகின்றனர். தற்கால உலகில் செயற்கைச் சாதனங்களான கருத்தடை முறைகள் மலிந்து கிடக்கின்றன. இவற்றால் ஏற்படும் பின் விளைவுக்ளால் குடும்பங்களில் வீண் சந்தேகம், உடல் நலக்குறைவு, குடும்பங்களில் பிளவு ஏற்படுகின்றது. ஆகவே தம்பதியர் தங்கள் குழந்தைப் பிறப்பை திட்டமிடவும், குழந்தை வேண்டுவோர் தங்களது வளமான காலத்தை அறிந்து குழந்தைகளைப் பெற்றெடுத்து மகிழ்ச்சியாக வாழவும், பொறுப்புள்ள பெற்றோராகத் திகழவும், இயற்கைமுறை குடும்ப நலத்திட்டத்தை எமது நிலையம் ஒவ்வொரு கருத்தரங்கிலும் அதன் வழிமுறைகளை வலியுறுத்தி வருகின்றது.

## திருமணமானவர்களை நிறைவளமாக்கும் நெறி

எமது குடும்பவளத்துணை நிலையம் திருமண ஆயத்தப் பயிற்சி நெறியுடன் தமது பணி முடிந்துவிட்டது என நினைக்கவில்லை. மாறாக திருமண மாணவர்களை அது பின் தொடர்ந்து திருமணமானவர்களுக்கு நிறைவளமாக்கும் பயிற்சியும் (marriage enrichment course) கொடுத்து வருகின்றது. இப்பயிற்சியினால் பங்கில் உள்ள தம்பதியர்களுக்கு கிறிஸ்தவ திருமண மேம்பாட்டை உணர்த்துதல், தம்பதியரிடையே உள்ள பரஸ்பர அன்பை வளர்த்தல், பெற்றோர் பிள்ளை உறவுகளை வளப்படுத்தல் என்பன இத்திட்டத்தின் நோக்கமாகும். எமது நிலையம்இப்பேர்ப்பட்ட 11 கருத்தரங்குகளை நடாத்தியிருக்கின்றது. இவற்றில் 4, (நான்கு) பங்குகளில் நடந்தேறின. சுன்னாகம் நூல் நிலையத்திலும், சாவகச்சேரி உள்ளூராட்சி மன்றத்திலும், சிறப்புக் கருத்தரங்குகளாக 2 கருத்தரங்குகளை நடாத்தி இருக்கின்றோம். சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கு யுவதிகளின் பிரச்சனைகள் பற்றி ஒரு கருத்தரங்கும் நடாத்தி உள்ளோம். இதை விட கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் ஒருவார 2 பயிற்சிக் கருத்தரங்குகளும், மன்னார் மறைமாவட்டத்தில் இதைப் போன்று ஒரு கருத்தரங்கும் நடாத்தப்பட்டது.

## குடும்ப ஆற்றுப்படுத்துதல்(Family counselling)

பிரச்சனைகளால் மேற்கொள்ளப்பட்டு இவற்றிலிருந்து மீள வகை தெரியாதோர் குடும்பப் பிரச்சனைகளால் நோயுறும் அங்கத்தவர்கள், வாழ்க்கைச் சிக்கலினால் பிளவுறும் குடும்பங்களில் வாழ்வோர், இத்தகையோர்க்கு ''குடும்ப ஆற்றுப்படுத்தல்'' (Family counselling-குடும்ப வளத்துணைகொடுத்தல்)எமது நிலையம் வழங்கி வருகின்றது. கடந்த வருடத்தில் மட்டும் 58 குடும்பங்கள் இவ் ஆற்றுப்படுத்தல் மூலம் நன்மையடைந்து இருக்கின்றன.

## எமது புதிய நிலையம்

அகம் என்பது இல்லம், அதே வேளையில் உள்ளம் என்ற இரு பொருட்களைக் கொண்ட ஒரு சொல்லாகும். எமது இந்தப் பணி மனையின் மூலம் இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளியேற்றி வைப்பதே எமது பணியாகும். அதன் பொருட்டே எமது இந்தப் பணிமனைக்கு ''அகவொளி'' என்ற பெயரைச் சூட்டி உள்ளோம்.

## எதிர்காலத் திட்டங்கள்

எமது எதிர்காலச் சேவைத் திட்டங்களைப் பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

1) குடும்பவளத்துணைத் தொண்டர்களைப்பயிற்றுவித்தல், உருவாக்குதல்.

2) தங்களது பிள்ளைகளைத் திருமணத்தில் இணைக்க முடியாமல் தவிக்கும் பெற்றோருக்கு உதவி செய்யும், தரகர்களின் பொய்யான தகவல்களால் நடத்தப்பட்ட பல சீர்கெட்ட திருமணங்களிலிருந்து மணமக்களைக் காக்கவும்,மணமக்கள் தகவல் திருமணத் தொடர்பு நிலையம் (Marriage information Bureau) ஒன்றை அமைத்தல்.

3) ஒவ்வொரு பங்குகளிலும் சில குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களைப் பயிற்றுவித்து அவர்கள் மூலம் குடும்ப வளத்துணைப் பணியை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களும் பெற்றுக்கொள்ள வகை செய்தல், இவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி அளித்து இவர்களின் வழியாக அனைவரது மேம்பாட்டையும் உயர்த்துதல், இந்தக்குழுக்களை நாம் குடும்ப நல்வாழ்வுச் சிறு குழுக்கள் என்றழைக்கலாம் எனக் கருதுகின்றோம்.

இவற்றுடன் நாம் எம்மால் ஆற்றக்கூடிய பணிகளுக்காக ஆலோசனைகளையும், ஊக்குவிப்புக்களையும் தாங்கள் வழங்க வேண்டுமென்று இந்த நிலையத்தின் சார்பில் தங்கள் அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எமது இந்த நிலையத் திறப்பு விழாவுக்கு எமது அழைப்பை ஏற்று வருகை தந்து மங்களகரமாக நிலையத்தைத் திறந்து வைத்த ஆயர் அவர்கட்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

# ஏன் இன்னும் தாமதம்?

ஈழத் திருச்சபை வரலாற்றிலே கடந்த ஆண்டு ஒரு மறு மலர்ச்சி ஆண்டு எனலாம். மேய்ப்புப் பணியில் புதுப்பித்தல் தேவை என்ற கருத்து எமது திருச்சபையில் முன்வைக்கப்பட்டது; அதற்காக ஓர் மாநாடு கூட்ட வேண்டும், அதற்கு ஆயத்தமாகப் பங்குகள் தோறும் புதுப்புனல் வாரம் நடைபெற்றது. எமது காவலனில் தொடர்ச்சியாக மக்களைச் சிந்திக்க வைக்கும் நல்ல சிந்தனைகள், கருத்துக் கருவூலங்கள், கட்டுரைகள், கவிதைகள் இன்னோரன்ன வெளி வந்துகொண்டிருந்தது. வாரந்தோறும் காவலனின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்க வைத்தது. நாட்டின் பல மறை மாவட்டங்களிலிருந்தும் சிறப்பாக மன்னார், மட்டுநகர் ஆயர்கள், குருக்கள், மடாதிபதிகள், பார்வையாளர்கள், பொது நிலையினர் கலந்து தூய ஆவியின் வழிநடத்துதலோடு பல்வேறு குழு மட்டங்களிலே ஆய்வுகள் நடத்திச் சிந்தித்து நற்செய்தியைப் பகிர்ந்து வாழும் திருச்சபையாக நாம் வாழப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மாநாடு முடிந்து ஆண்டொன்று கடந்து விட்டது. ஆனால் தீர்மானங்கள் எந்த அளவில் அமுலாக்கப்பட்டிருக்கின்றது. இது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. மாநாட்டின் பின்னர் (14-05-94) தூய ஆவியின் திருவிழாவுக்கு முன்னர் திருவழிபாட்டுக் கூட்டம் ஒன்று மறைக்கல்வி நடுநிலையத்திலே கூட்டப்பட்டது. தீர்மானங்களில் சிலவற்றையாவது உடனடியாக அமுல் படுத்தும் நோக்கோடு பல சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன, வழிபாட்டில் ஆடம்பரங்களைத் தவிர்த்தல், இறைவார்த்தைக்கு முக்கிய இடம் கொடுத்தல், பங்குகளில் குழுமங்களை ஏற்படுத்தி நற்செய்தியை வாழமுயற்சித்தல்,ஆலய விழாக்களிலே வெளி ஆடம்பர சுரூப பவனிகளை மட்டுப் படுத்தல், சுரூபங்களுக்கு (மாந்தைகள்) ஆடைகள் கொடுப்பது தேவையற்றது. இப்படியான வற்றையெல்லாம் குழுமட்டத்தில் ஆராய்ந்து பொது அமர்வில் எல்லோரும் ஏகோபித்த தீர்மானமாக மேற்கூறியவற்றைச் சகல பங்குகளிலும் ஏககாலத்தில் நடைமுறைப் படுத்துவது குருக்களுக்கும், மக்களுக்கும் மத்தியில் கருத்து முரண்பாடுகள் ஏற்படாதிருக்க உதவியாக அமையும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை நடப்பதோ ஒவ்வொரு ஆலயத்திலும் ஒவ்வொரு நடைமுறை. ஒரு குரு துணிந்து பல சிரமங்கள் மத்தியிலேதீர்மானத்தைப் பங்கிலே அமுலாக்கி விட்டுச் செல்ல அடுத்து வரும் குருவுடன் அந்த நடைமுறைகளை முறியடிக்கும் நிலை பரிதாபத்திற்குரியது. அடுத்த ஆலய விழாக்களிலே கலந்து கொள்ளும் மக்கள் அந்த ஆலயத்தில் ஆடம்பரமாக விழா எமக்கு மட்டும் என்ன பிச்சைக்கார விழா என்றவாறு குருக்களுடன் கேள்விக் கணைகளைத் தொடுக்கும்நிலை, அவர்கள் விட்டுக்கொடுத்து விட்டால் முன்னையவர் மக்களின் நிந்தைக்கும். பின்னையவர் நல் மதிப்பிற்கும் உரியவராகின்றனர்.ஏன் இந்த நிலை? இதற்காகவா எவ்வளவோ பணத்தையும், காலத்தையும், நேரத்தையும் செலவிட்டு மாநாடு நடைபெற்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடந்து முடிந்து முப்பது வருடங்களாகின்றது; அங்கே ஏற்பட்ட புதுப்பித்தல் இங்கே இப்போது தான் மாநாட்டின் மூலம் வாழத் தீர்மானிக்கப்பட்டது. இதை அமுலாக்க இன்னமும் முப்பது ஆண்டுகள் கடக்க வேண்டுமா?

எம் அன்றாட வாழ்விலே உலகியல் ரீதியாக ஏற்படுகின்ற மாற்றங்கள், நாகரீகம், மறு மலர்ச்சி என்ற பெயரில் உடனுக்குடன் வாழ முற்படுகின்றோம். தினமும் மாற்றங்கள் பல்வேறு கோணங்களில் ஏற்படுகின்றது. திருச்சபையிலே மட்டும் மாற்றங்களை ஏற்று வாழ நாம் ஏன் தயங்க வேண்டும்? எடுத்த தீர்மானங்களை நிறைவேற்ற எமது மேலிடம் தான் ஏன் தாமதிக்க வேண்டும்? ''எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பதிழுக்கு'', எனவே எம்மில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த புதுப்பித்துப் பகிர்ந்து வாழும் திருச்சபையாக வாழ தூய ஆவியின் ஏவுதலோடு தீர்மானித்தோம். பின்னரும் கருத்தரங்கு பின் படுத்துறங்கு என்ற நிலை ஏன்? விழித்தெழுந்து செயற்படுவோம்.

மோ. மாற்கு யேசுதாசன்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுண்ணாகம்.

# தவக்காலம் அருளின் காலம்

★ செ. சாந்தி மறையாசிரியர், மானிப்பாய்

தவக்காலம் மனந்திரும்பும் காலம், நம்பிக்கையின்காலம், இறைவனை அண்டிச் செல்லும் காலம். இதிலும் சிறப்பாக ஆழமாக கருத்தில் கூறுவதாயின் ''அருளின்'' காலம் என்று விளக்கம்கொடுக்கலாம்.

குறிப்பாக எமது அன்றாட வாழ்வை எடுத்து சிந்தித்தால் ''துன்பம்'' ஏன் வருகிறது என்ற கேள்வி நம் எல்லோரினதும் உள்ளங்களிலும் எழுகின்றது. துன்பத்தை நாம் விரும்பி ஏற்பது மிகவும் கடினம், ஆனால் இறைமகன் யேசு துன்பத்தின் சின்னமாகிய சிலுவையை விரும்பி ஏற்றார். அடிமையின் அடையாளமான சிலுவையை மீட்பின் அடையாளமாக மாற்றினார். இதனூடாக தொடர்கிறது கல்வாரிப் பலி. இது முற்றுப் பெற்று விட்ட ஒன்றல்ல. இன்றும் அதுநடைபெறுகிறது. உன் வாழ்விலும் அந்தக் கல்வாரிப் பலி நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. இதை

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

நற்செய்தி படிப்போம் | 14

## இயேசுவின் அதிகாரபோதனை
## ஆர்வமிகு பதில் (சென்ற இதழ் தொடர்ச்சி)

குறு மதி படைத்த குள்ள நரிகளான பரிசேயர்களின் குதர்க்கமான கேள்விகளுக்கெல்லாம் கூர்மையான பதிலைக் கேட்டவர்கள் வியப்படைந்த நிலையில் கூனிக் குறுகி ஒரு புறம் ஒதுங்கினார்கள். ஆலயத்திலே தமக்கு ஏற்பட்ட அவமானத்தைச் சகித்துக்கொள்ள முடியாத சதுசேயர்கள், இயேசுவைச் சந்திக்க, அவரின் சிந்தனைத் துகள்களைத் துருவி ஆராய்ந்து, அவரை வந்திப்பதற்கல்ல, நிந்திப்பதற்கும், இறுதியில் தொலைத்துக் கட்டவும் முடிவெடுத்த நிலையில் இயேசுவின் முன் தங்கள் முகங்களைக் காட்டுகின்றார்கள்.

வானதூதர்கள், உயிர்த்தெழுதல் – மறுவுலக வாழ்வு இவற்றில் துளி கூட நம்பிக்கையற்றவர்கள்தான் சதுசேயர்கள் – நிலப்பிரபுக்களாகவும், பண முதலைகளாகவும், சீரோடு வாழ்ந்து மக்களின் செல்வாக்கை எப்போதும் தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டே வந்தார்கள். உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற இவர்கள் ஒருநாள் இயேசுவிடம் ஒரு கேள்வியைக் கேட்டு, அவரை ஒரு உலுப்பு உலுப்பி, தங்கள் கொள்கையை மக்கள் மத்தியில் நிலைநாட்டி இயேசுவின் போதகம் வெறும் அர்த்தமற்ற தொன்று என்று காட்டி மக்களையே கிளர்ந்தெழச் செய்ய முனைப்போடு முன் வருகின்றார்கள்.

எல்லோரையும் போல் சதுசேயரும் இயேசுவிடம் வந்து முகஸ்துதிகூறி, போதகரே! ஒருவனுடைய சகோதரன் இறந்து பிள்ளையில்லாமல் மனைவியை விட்டுச் சென்றால் அவனுடைய சகோதரன் அவளை மணந்து தன் சகோதரனுக்கு மகப்பேறு அளிக்கட்டும் என்று மோயீசன் எழுதி வைத்துள்ளார். எனவே சகோதரர்கள் எழுவர் இருந்தனர். மூத்தவன் ஒருத்தியை மணந்து மகப்பேறு இன்றி இறந்தான். இரண்டாம் சகோதரனும் அவளை மணந்து மகப்பேறு இன்றி இறந்தான். மூன்றாம் சகோதரனும் அப்படியே. இவ்வாறு எழுவருக்கும் மகப்பேறு இல்லாமல் போயிற்று. எல்லாருக்கும் கடைசியில் அப்பெண்ணும் இறந்தாள். உயிர்ப்பு நாளில் அவர்கள் உயிர்த்தெழும்போது அவள் யாருக்கு மனைவியாய் இருப்பாள்? எழுவரும் அவளை மனைவியாகக் கொண்டிருந்தனரே என்று வினவினர். இந்நிகழ்வானது இஸ்ராயேல் மக்களிடையே நிலவும் ஒரு சாதாரண நிகழ்வாகும். இது பற்றி ஒருபோதும் அவர்கள் கவலைப்படுவதேயில்லை. ஏனெனில் பெருந் தலைவர் மோயீசனின் மூலம் இவர்கள் பெற்றுக் கொண்ட சட்டம். இந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டே யேசுவை மட்டந் தட்டப் பார்க்கிறார்கள் சதுசேயர்கள். ''திட்டம்போட்டுத் திருடுற கூட்டம்திருடிக்கொண்டேயிருக்குது. — அதை சட்டம்போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டேயிருக்குது.
திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.''

என்று ஒரு கவிஞன் பாடியது போல, மறை நூலைப்பற்றி நிரம்பிய அறிவுகொண்ட சதுசேயர்களிடம், இயேசு மறை நூலையும் கடவுளுடைய வல்லமையையும் நீங்கள் அறியாததாலன்றோ தவறாக நினைக்கிறீர்கள்.? ஏனெனில் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழும் போது பெண்கொள்வதுமில்லை, கொடுப்பதுமில்லை. ஆனால் வானகத்தில் தேவதூதர்கள் போலிப்பார்கள். ஏனெனில் கடவுள் வாழ்வோரின் கடவுளே யன்றி இறந்தோரின் கடவுளல்ல என்று மறை நூலில் விற்பன்னரான சதுசேயர்களிடமே கேட்டு நிற்கின்றார் இயேசு.

தங்கள் குருட்டுக்கொள்கையைத் திணிப்பதற்கு மறை நூலைத்தப்பாக விளங்கிக் கொள்ளக்கூடாது. மறை நூலில் வாழ்வோரின் கடவுளே பேசிக்கொண்டிருக்கின்றார். நீங்களோ அப்பேச்சைக் கேட்க, சிந்திக்க மனமற்றவர்களாயிருக்கின்றீர்கள். நீங்களே உங்களை மறைநூலுக்கேற்றவிதத்திலே திருத்திக்கொள்ளாவிடில், உங்களைத்திருத்த யாராலும் முடியாது என்று கூறாமல் கூறி, அவர்களை உதாசீனம் செய்யாமல், அவர்கள் மேல் சினங்கொள்ளாமல் அவர்களை அனுதாபத்துடன் நோக்குகின்றார். நீங்கள் மறை நூலில் நிரம்பிய அறிவு பெற்றிருந்தும் அதில் ''நீங்கள் பெரிதும் தவறிவிட்டீர்கள்'' என்று அவர்களின் உள்ளங்களை அவர்கள் முன் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார் உலகிற்கு ஒளிகொணர்ந்த இயேசு. செய்வதறியாது திகைத்து மௌனத்தில் அவ்விடம் விட்டு கலைந்து செல்கிறார்கள் கர்வம் பிடித்த சதுசேயர்கள். (வளரும்)

மறை ஆசிரியர்
S. அந்தோனிப்பிள்ளை

## தவக்காலம் அருளின்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித இனம் உணர்கிறதா? இதில் ஒன்றுதான் உன்னுடைய சீர்குலைந்த வாழ்வு, நிம்மதியற்ற நிலை, உன்னில் இருக்கும் துர்க்குணம். இவை அனைத்தும் உன்னை அடியோடு அழிக்கிறது. ஆனால் உனக்கு இறைபராமரிப்பு, அன்பு உண்டு. நீ எவ்வளவு உருக்குலைந்தவனாக காணப்பட்டாலும் இரக்கமுள்ள இறைவன் உனக்குமன்னிப்பு அளித்து அன்பில் அரவணைக்க காத்திருக்கிறார்.

காலம் கடந்த கல்வாரிப் பயணம் இரண்டாயிரம் ஆண்டு கட்குமுன் நடந்தேறி மறைந்து விட்ட ஒன்றல்ல, இன்றும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் ஏன் உன்வாழ்விலும் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும் ஒரு சோக நாடகம். அன்று நடந்த கல்வாரிப்பயணத்தில் உன் கருத்தை செலுத்தி கண்கலங்கும் இவ்வேளையில் இன்று உன் வாழ்வை சிந்தித்துப்பார்! மௌனம் சாதிக்கிறாயா? நீ போடும் வெளி வேடங்கள் எவை? பாத்திரங்கள் எவை யெவை? பொன்னாசைபிடித்த யூதாசா? பெண்ணாசை கொண்ட ஏரோதா? மண்ணாசை படைத்த பிலாத்துவா? மனிதா சிந்தி, சிந்தித்து மறுமொழி சொல்! உன்வாழ்வை மாற்று. அருள்வாழ்வை அடைந்து கொள். பரமனுக்கு பதில் சொல்! பாங்கான கிறிஸ்தவ வாழ்வு வாழ்.

# இன்று வேதசாட்சிகளின் யுகம் ஆரம்பமாகி விட்டதா?

★ பணிவாளன்

## 1. யோசேவ் வாஸ் அடிகளின் முன்மாதிரிகை

இவ்வருடத்திற்கான தவக்காலத்தை நாம் மிகவும் முக்கியமான தொன்றாகக் கருதுகிறோம். பாப்பரசரின் வருகையும் புனித யோசேவ் வாசின் முத்திப்பேறுபெற்ற பட்டமும் தற்செயலாக நடைபெற்ற சம்பவங்களல்லவே. அவை இரண்டாம் ஈழப்போரின் தற்காலிக நிறுத்தத்திற்கும் ஓர் இருண்ட வருங்காலத்திற்குமிடையே தோன்றியிருக்கின்ற வெளியாகும். இவ்விடை வெளியானது, ஒன்றில் பூச்சியத்திற்கு இட்டுச் செல்லலாம் அல்லது தெய்வீக வெளிக்குள் இட்டுச் செல்லும் ஒரு பாலமாகவும் அமையலாம். இவை முத்திப்பேறுபெற்ற யோசேவ் வாசின் உதவி கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்நாற்பது நாள் இடைவெளியை அவர் செய்தது போன்று ஜெபமாலையால் நிரப்பவேண்டும்.

அவர் யாழ்ப்பாணத்தின் நகரில் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியும் ஆன்மாவின் உள்ளரங்கப்பெரும் ஆறுதல்களால் நிறைந்த அனுபவத்தைக் கொண்டிருந்தது. ஏனெனில் அவர் ஏழ்மையாக உடுத்தி, ஏழ்மையாக வாழ்ந்து, ஜெபமாலையினால் அவ்வெறும் கணங்களை நிறைத்தார். அவரைப்பின்பற்றி உலகத்தின் பரிகாசங்களுக்குப் பயப்படாமல், யோசேவ் வாஸ் பயப்படாதது போன்று நாமும் விசுவாசசாட்சியம் பகரவேண்டும். இங்குள்ள வேறு மதத்தினர் தங்களது மத அடையாளங்களை வெளிப்படையாக அணிந்து பெருமையோடு திரிவதைப் பார்க்கின்றோம். நாமும் விசுவாச அடையாளங்களைப் பெருமையுடன் அணிவதற்கு ஏன் தயங்குகிறோம்? வெறும் சம்பிரதாயமாக அல்ல, யோசேவ் வாஸ் போன்று நற்செய்தி வாழ்வைப் பிரதிபலிக்கும் ஏழ்மையுடன் ஜெபமாலையைச் சொல்லிக் கொண்டு அவர் வீதியாகச் சென்றபொழுது பலர் நகைத்தனர்; பலர் விழுத்தாட்டினர். இங்குமங்கும் உருட்டி விட்டனர். அவர் அணிந்த உடையை இழுத்துப்பந்தாட்டினர். வேதகலாபனையின் அந்த நூற்றாண்டிற்கு அவர் எவ்வளவு முன்மாதிரிகையானார். இத்துன்பங்களையெல்லாம் ஆவியின் வல்லமையோடும், உள்ளரங்க சந்தோசத்துடனும் தாங்கி நடந்தார். அவர் நம் தெருக்களில் திரிந்த போது வீட்டுக்குவீடு கத்தோலிக்கரின் விசுவாச அடையாளங்கள் எங்கு தென்படுகின்றதென்று உன்னிப்பாகக் கவனித்தார். வாசலில்சிலுவை, புனித சந்தியோகுமையோரின் படம், வீட்டினுள்ளே தேவதாய், அந்தோனியார், இயேசுவின் படங்கள், சுரூபங்கள், வேதாகமநூல் இவற்றைவிட்டு அந்நியதேவர்களின் படங்களையும், கொடூரரூபமுகங்களையும் கட்டித்தொங்க விடுவோரின் தொகை பெருகிவருகிறது. எம் ஆன்மாவிற்கு முதல்வீடு எம் உடலே, நாம் அணியும் உடைகள், அதன் பின் நாம் பாவிப்பன, எம் வீடு வாசல்கள், சைக்கிள்வண்டி, வள்ளம் இவ்வெவ்வேறு உடல்கள் விசுவாசத்தைப் பிரதிபலிக்கின்றன. இன்று கத்தோலிக்கர்கள் வாழ்வில் வெளிப்படையான வேதகாலாபனை இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆனால் ஆரம்பிக்க மாட்டாதென்று சொல்வதற்குமில்லை, சீனாவில் இன்று வேதகாலாபனை நடக்கின்றது. இந்தியாவின் அருநாச்சலப்பிரதேசில் கிறிஸ்தவர்களுக்கெதிரான வேதகாலாபனை பற்றியறிந்தோம். பாக்கிஸ்தானில் கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிடுவதற்காக சிலர் மரணதண்டனையையே பெறுகின்றனர். ஆகையினால் தான் அவர்களுக்காகவும், துன்புறும் திருச்சபைக்காகவும், சமாதானத்திற்காகவும் ஜெபம் செய்ய இத்தவக்காலம் நல்ல நேரமாகின்றது.

## 2. உலக குருட்டாட்டத்தில் ஏமாறாதிருப்போம்

ஒருவர் மற்றவருக்கு விசுவாச உறுதியளிப்பது இந்நாட்களில் நாம் செய்யவேண்டிய பெரும் கடன். உலக காரியங்களை அறிக்கையிடுவதில் ஆர்வம் பெருகிவருகின்ற இவ்வேளையில் விசுவாசகாரியங்களை ஊக்குவிப்போர் தொகை அருகிவருகிறது. இயேசு சொன்னதற்கு எதிர்மாறாக அறுவடையோகுறைவு வேலையாட்களோ மிகுதி, விசுவாசத்திற்கென உண்மையாக உழைப்பவர்கள் அருகிவிட்டதால் ஆண்டவரின் அரசின் களஞ்சியங்கள் வெறுமையாகின்றன. யோசேவ் வாசை அவதானித்த ஓர் கத்தோலிக்கன் இன்னொரு கத்தோலிக்கனுக்கு இவ்விசுவாச சத்தியத்தை அறிக்கையிட்டதினால் விசுவாசம் இம் மண்ணில் தழைக்கவழி பிறந்தது. இக்காலங்களில் பெரும் செலவில் பெரும் ஆடம்பரங்களுடன் விசுவாசிகளின் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. பக்தர்கள் தொகைபெருகி விட்டது, உண்மையடியார்கள் தொகை அருகிவிட்டது. இதுவே அன்று யோசேவ்வாஸ் அவனித்த ஆன்மீகப்பாலைவன நிலை என்பது 1687-ம் ஆண்டு அவர் எழுதிய கடிதங்களிலிருந்து புலனாகிறதல்லவா? அவர் மறைந்து வாழ்ந்தவர். இரவின் மௌனத்திலே தான் அவர் அசைவாட்டமும், செயலாட்டமும். நூறு ஆலயங்கள் இருந்த இடத்தில் எதுவும் மிஞ்சவில்லை. சில்லாலையின் வயல்கள் மத்தியில் மறைந்திருந்த சிறிய ஆலயமே எஞ்சியிருந்தது. அங்குதான் இரவோடிரவாக அவர் செயல்பட்டார். அவர் எல்லாவற்றிலும் சில்லாலையின் மோதரத்தின் சொற்படியே வழி நடந்தார். எங்கிருப்பது, எப்போது போதிப்பது, அருட்சாதனங்களை அருளுவது பலி ஒப்புக் கொடுப்பது என்பதிலெல்லாம் இல்லறத்தானாயே மோதரத்தின் சொற்கேற்ப செய்ய வேண்டியிருந்தது. மோதரத்திற்கு சுவாமியின் ஆன்மீக அவசரம் விளங்கவில்லை. இருந்தும் அவருக்கு அமைந்தார்.

அவருடைய இரவுப்பயணங்களின் பொழுது காடு கரம்பையெல்லாம் சுற்றி வளைத்துக் கடக்கவேண்டியிருந்தது. பகலில் இருண்ட பங்கர்களில் ஒளிந்திருப்பது போன்றுவிழித்திருக்க வேண்டியிருந்தது. வீடுகளில், இருட்டறைகளில் அடைபட்டு இருமக்கூடாது, தும்மக்கூடாது. எதுவித சத்தமும் எழுப்பக் கூடாது என்ற கட்டுப்பாடுகளுக்குள்ளேயே அவர் வாழ வேண்டியிருந்தது. இதுவே அவருடைய வார்த்தைகளை விட அவர் வாழ்வினூடாக கிறிஸ்தவ சாட்சியம் வெளிப்பட்டு பிரகாசித்து அம்மக்களை மனம் திருப்பவும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் உதவியது. இத்தவக்காலம் வீடுகளினுள்ளும் வருத்த அறைகளினுள்ளும், வதைமுகாம்களிலும், சிறைகளிலும், தனிமையிலும் புறக்கணிப்பிலும் வாழும் பலருக்கு நல்ல ஆன்மீக விளைச்சல் காலமாகலாம். சென்ற வருடத் தொடக்கத்திலே பாப்பிறை எழுதிய (THE SPLENDOUR OF TRUTH) ''உண்மையின் மேன்மை'' என்ற சுற்று நிருபத்திலே இன்றைய ஜனநாயகத்திற்கும் சூழ்நிலை சார்ந்த ஒழுக்கவியலுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தை மனித விடுதலைக்கும், மாண்புக்கும் எதிரான சர்வாதிகார உறவு எனக்குறிப்பிடுகிறார். நவீன அரசியல் கலாசாரம் பெருவாரியாக உற்பத்தி பண்ணும் இப்புதிய ஆபத்தான ஒழுக்கவியல் மேற்கிலும், திருச்சபையின் இறையரசினதும் நற்செய்தி வாழ்க்கை முறைக்கு பயங்கரமான சவாலாக அமைகிறதை சுட்டிக்காட்டுகிறார்.

(வளரும்)

# 'மெய்யியல் நோக்கு' இதழ் பற்றிய ஓர் பார்வை

★ தமிழ்நேசன்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறை மாணவர்களும், விரிவுரையாளர்களும், ஏனைய மெய்யியல் சிந்தனையாளர்களும் ஒன்றிணைந்து 'மெய்யியல் நோக்கு' என்ற அரையாண்டு மெய்யியல் இதழை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

மெய்யியல் எமது நாளாந்த வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒரு கற்கை நெறி. மனிதன் தன்னையும், தான் வாழ்கின்ற சூழலையும், அதற்கு அப்பாற்பட்டவர்களையும் புரிந்து கொள்ள, தெரிந்து கொள்ள இந்த மெய்யியல் உதவிபுரிகின்றது.

குருத்துவக் கல்லூரியிலே ஆங்கில மொழி மூலம் கற்கின்ற மெய்யியல் சிந்தனைகளுக்கு தமிழ்வடிவம் கொடுக்க, சாதாரண மக்களோடும் அச்சிந்தனைகளைப் பகிர்ந்து இச் சஞ்சிகை மாணவர்களுக்கு ஒரு களமாக அமைகின்றது.

64 பக்கங்களைக் கொண்ட இச் சஞ்சிகை கனதியான பல ஆக்கங்களைத் தாங்கி வந்துள்ளது. இச் சஞ்சிகையின் முதலாவது இதழே சிறப்பான தாய் நம்பிக்கை ஊட்டுவதாய் அமைந்துள்ளது.

சஞ்சிகையின் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆங்கிலத்தில் சுருக்கம் கொடுக்கப்பட்டது நல்லது. ஆனால் சஞ்சிகையின் வெளி அட்டையிலே எந்த விபரமும் ஆங்கிலத்தில் கொடுக்கப்படவில்லை. எனவே தமிழ் தெரியாத ஆங்கில அறிவு படைத்த ஒருவர் இச் சஞ்சிகையில் ஆங்கிலக் குறிப்புகள் எதுவுமே இல்லை என எண்ணி வாசிக்காமலே விட்டுவிட வாய்ப்பு உண்டு.

மெய்யியலில் வருகின்ற கலைச் சொற்களை அனைவரும் விளங்கிக் கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. எனவே முக்கியமான ஆங்கில மெய்யியல் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை கண்டறிய வேண்டும். மெய்யியல் அறிஞர்களையும், தமிழ் அறிஞர்களையும் ஒன்றிணைத்து இம் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

இறுதியாக இச்சஞ்சிகையின் ஆசிரியர் அருள் கலாநிதி டொமினிக் ஜோசப் அவர்களின் அறிமுக உரையிலிருந்து ஒரு சிறு பகுதியைத் தருகின்றேன். "தமிழினம் மனித மாண்புடன் வாழ, பல இன்னல் இடையூறுகள் மத்தியில் சிக்கி அவற்றில் இருந்து விடுபட முயற்சிக்கும் இவ்வேளையில், அதற்குரிய தனித்துவ மெய்யியல் உருவாக வேண்டும். உருவாகும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் நம்பிக்கை யூட்டுவதாகவும் தென்படுகின்றன.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 9<br>சுடர்: 6 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

## சகிப்புத்தன்மை

**ச**ண்டை சச்சரவின்றி சக்தி மிகு
**கி**றிஸ்துவின் அடிச்சுவட்டில்
**இப்**பொழுதும் எப்பொழுதும்
**பு**ரிந்துணர்வுடன்
எ**த்**துயரையும்
**த**ன்னலம் அகற்றி
**இன்**முகம் கொண்டு
பொறு**மை**யுடன் ஏற்று வாழ்வது.

**சிந்தனைக்கு**

தாக்கினோர் தூண்டப் பட்டோர்
தலைவன் மேல் துப்பினோர்கள்!
வாக்கினால் செய்கை யாலே
மகத்தான நன்மை செய்யும்
போக்கினான் அமைதி கொண்டான்.

இயேசு காவியம் (128)

அன்புக்கண்மணிகாள்!

தவக்காலத்தில் கவிஞர் கண்ணதாசனின் இனிய தமிழில், உள்ளம் உருகவைக்கும் இயேசு காவியத்தைப் படியுங்கள்! தியானியுங்கள்.

அன்பின், அன்பு விழி

## காவலன் களஞ்சியம் 1995

### பார்வை 1

போட்டி விதிகள்

1) காவலன் வாசகர் அனைவரும் பங்குபெறலாம்.
2) பிரிவுகள்: ஆரம்ப பிரிவு : ஆண்டு 8 வரை
மத்திய பிரிவு : ஆண்டுகள் 9, 10, 11
உயர் பிரிவு : ஏனையோர்
3) பரிசுகள் : ஒவ்வொரு பிரிவிலும் அதிகூடிய புள்ளிகள் பெறும் நற்பேறாளர் ஒருவருக்குப் பரிசு அளிக்கப்படும்.

ஆ. பி. பரிசு ரூ. 25 ம. பி. பரிசு ரூ. 30 உ. பி. பரிசு ரூ. 30

போட்டிக்கு உங்களைத்தயார் செய்யுங்கள்.

போட்டி வினாக்கள் அடுத்த சுடரில் வரும்.

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-12

1978ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் திகதி திருத்தந்தையைத் தெரிந்தெடுக்கும் கட்டம் தொடங்கியது. 111 கருதினால்மார் உரோமையில் உள்ள சிஸ்டைன் பேராலயத்தில் கூடினார்கள்.

எல்லாத் தொடர்புகளும் வெளி உலகத்துடன் துண்டிக்கப்பட்டன. முதல் நாள் வாக்குப் பதிவு இடம் பெற்றது. முடிவு ஒன்றும் எட்டவில்லை. இரண்டாம் நாள் வாக்குப்பதிவு இடம் பெற்றது. உரோமை நேரப்படி மாலை 6.18மணியளவில் கருதினால் வொய்திலா திருத்தந்தையாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இராயப்பர் சதுக்கத்திலே நின்ற இலட்சக்கணக்கான மக்களுக்கு சிஸ்ரைன் பேராலய புகைபோக்கி வழியாகச் செய்தி அறிவிக்கப்பட்டது. பாப்பரசர் யாரும் தெரியப்படவில்லை என கரும்புகையைக் கக்கிமெக்களைக் காத்து நிற்க வைத்த புகைபோக்கி இப்போ வெண்புகையைக் கக்கி பாப்பரசர் தெரிந்தெடுக்கப்பட்டார் என்ற மகிழ்ச்சியின் செய்தியை அறிவித்தது.

மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில்குதித்தார்கள். கைதட்டல் ஆட்டம், பாட்டு - மகிழ்ச்சி கரை தட்டியது.

அரை மணி நேரம் ஆகியிருக்கும். பேராலயத்தின் பல கணியின் யன்னல்கள் திறக்கப்பட்டன. கருதினால் பெரிகிள் பெலிசி தோன்றி "ஆனந்தமான செய்தி ஒன்றை உங்களுக்கு அறிவிக்கப் போகிறேன், ஒரு போப் ஆண்டவர் நம்மிடையே உதயமாகி விட்டார்" என்று கூறினார். மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் துள்ளிக்குதித்தார்கள். "கரோல் வொய்ரிலா..." என்று அவரின் பெயரை அறிவித்ததும் அவர் யார், அவர் யார் என்று தம்மிடையே கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

"இரண்டாம் அருள் சின்னப்பர்..." என்று அவரின் பெயரை அறிவித்ததும் தம் அன்புக்குரிய, ஒரு மாத கால புன்னகை மன்னனின் பெயரை வைத்திருக்கும் இவர் யாராக இருந்தாலும் பரவாயில்லை என்ற நிலைக்கு வந்து விட்டனர்.

எப்போ அவர் தோன்றுவார் என்று ஏங்கியிருந்த மக்கள் நடுவே தோன்றினார். பேசினார். வத்திக்கான் அதிகாரிகளுக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில் விதிமுறைகளை உதறிக்கொண்டு குழுமியிருந்த மக்கள் வெள்ளத்தை நோக்கி இத்தாலிய மொழியில் மிக இயல்பாகப் பேசினார். "இயேசுக் கிறிஸ்து புகழப்படுவாராக" என்று மகிழ்ச்சி பொங்கப் பதில் சொன்னார்கள்.

"அன்பு நிறை சகோதர சகோதரிகளே அண்மையில் மறைந்த நம் ஆண்டகை 1ஆம் அருள் சின்னப்பரின் சோக நினைவிலிருந்தே நம் நெஞ்சம் மீளாத நிலையிலே போப் ஆண்டவரைத் தேர்ந்தெடுக்கும் புனித பணியில், கருதினால்கள் அனைவரும் வெகு தொலைக்கு அப்பால் உள்ள ஒருவரைத் தெரிந்துள்ளனர். கண்ணுக்குத் தொலைவாயிருந்தாலும், நம் நெஞ்ச நேசத்தால், கருத்துத் தொடர்பால் நாம் மிக நெருக்கமாகவே உள்ளோம். என்தோளிலே விழுந்துள்ள மாபெரும் பொறுப்பினைச் சுமக்க என் மனம் நடுங்கினாலும், நம் இதய நேசர் இயேசுவின் ஆணைக்கு அடி பணிந்து, புனித அன்னை மரியின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் ஆட்பட்டு, இப்பணி வினை நான் ஏற்கிறேன்" என்று உணர்ச்சி பொங்க உரைத்தார்.

அடுத்து அவர் சொன்னது உவர்கள் உள்ளங்களை நெகிழ வைத்தது. (வளரும்)


## 2ஆம் வருட நினைவஞ்சலி



திரு. பத்தலோமியு யோசவ் அன்ரன்

பிறப்பு; 1916-01-11 இறப்பு 1993-03-27

சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 27-03-95 திங்கள் காலை 6 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிகளில் பங்குபற்றிச் செபிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அருட்சகோதரி டெலாறோஸ் A. C.

ஊர்துமடம் கோவில் வீதி, யாழ்ப்பாணம். A/14/95

## 1ஆம் ஆண்டு நினைவு



எஸ். எம். யேசவ் (இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு: 20-10-1910 இறப்பு: 10-03-1984

முடிவில்லாத ஒளி இவர் மேல் பிரகாசிக்கக் கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

சில்லாலை A/13/95

## விண்ணக வாழ்வின் முதலாண்டு நினைவு

02-04-1995



திரு சவிரிமுத்து நீக்லொப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்)

மலர்வு 1908-02-28 உதிர்வு 1994-04-02

இரக்கம் நிறை இறைவா! உமதடியான் திரு. நீக்லொப்பிள்ளையின் ஆன்மாவுக்கு நித்திய பேரின்பத்தை அளித்தருளும்.

அன்னாரின் முதலாண்டு நினைவுத் திருப்பலி புனித நீக்கிலார் ஆலயத்தில் 05-04-95 புதன்கிழமை காலை 5-45 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

நாவாந்துறை, யாழ்ப்பாணம். A/11/95 மனைவி, உறவினர்

## திருமலை - மட்டுநகர் ஆயரின் தவக்கால சுற்றுமடல்

### ஆன்மீக வாழ்வை கட்டி எழுப்புவோம்.

ஆண்டுதோறும் மலரும் அருள்நிறை காலமாக விளங்கும் தவக்காலத்தில் நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம். இத்தவக்காலத்தில் வரும் நாற்பது நாட்களில் ஒன்றையேனும் நாம் வீணாக்கக்கூடாது. தற்காலச் சூழலை உற்றுநோக்கும்போது, மக்கள் சுகபோகங்களில் மூழ்குவதையும், வன்முறைச் சூழல் தொடர்வதையும், ஏழ்மை நிலை அதிகரிப்பதையும், நிச்சயமற்ற வாழ்வின் அச்சுறுத்தல்கள் தலைதூக்கியிருப்பதையும் காண்கின்றோம். இவற்றின் மத்தியில் வாழும் நாம் எமது ஆன்மீக வாழ்வைக் கட்டி எழுப்பவேண்டும், அதை உறுதிப்படுத்தவேண்டும் என்ற கருத்தையே உங்கள்முன் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

### நீடித்த அமைதிக்காகச் செபிப்போம்.

அதேவேளையில் இன்றைய அரசாங்கம் ஏழ்மையை ஒழிப்பதில் கொண்டிருக்கும் திடசங்கற்பத்தையும், சமய சமூக உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவதில் காட்டும் ஆர்வத்தையும், சமாதானத்தை அடையத் துணிச்சலோடு முன்னெடுத்துச் செல்லும் செயற்பாடுகளையும் நாம் அறிவோம். இந்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெற்று ஓர் நீடித்த அமைதியை உருவாக்கித்தர நாம் அனைவரும் ஊக்குவிப்போமாக.

### சகிப்புத் தன்மை உணர்வை வளர்ப்போம்.

நடக்கும் ஆண்டு "சகிப்புத் தன்மையின் ஆண்டு" என்று சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய கால கட்டத்தின் நிகழ்வுகள் அனைத்திற்கும் ஒரு மாற்று மருந்தாக அமைய வேண்டியது சகிப்புத்தன்மை. மனித முன்னேற்றப் பணிகள், சமாதான முயற்சிகள் பலன்தரவேண்டுமாயின் சகிப்புத்தன்மை கடைப்பிடிக்கப்படல் வேண்டும். இவ்வுணர்வையும் உங்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்வது நலம் எனக் கருதுகிறோம்.

தபக்காலத்தை முன்னிட்டு

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

**"அன்பில் மலர்ந்த அமர காவியம்"**

( திருப்பாடுகளின் காட்சி )

காலம் : 6, 7, 8, 9 ஏப்பிரல் 1995

நேரம் : மாலை 6-45 மணி

இடம் : மன்ற அரங்கு, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

( ஆசனப்பதிவு பணிமனையில் செய்துகொள்ளலாம் )

திருமறைக் கலாமன்றம்

### திருமலை-மட்டுநகர் ..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கால சுற்றுமடலில் விசேட தவக்கால செயற்பாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நடந்தேறிய திருத்தந்தையின் வருகை, யோசேவ் வாஸ் முனிவரின் முத்திப் பேறு பட்டம், நடக்கவிருக்கும் தேசிய மேய்ப்புப்பணி மாநாடு, மற்றும் தவக்கால இல்லத் தரிசிப்பு முதலிய விடயங்களைப் பற்றி இத்திருமடலில் குறிப்பிட்டுள்ளார் ஆயர் அவர்கள்.

### வெளிவாரிக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவ மாணவர்கள் ஒன்றியத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து பயன் பெறும்படி அழைக்கப்படுகின்றார்கள்.

செயலர்,

வெளிவாரிக்கிறிஸ்தவமாணவர் ஒன்றியம்.

### தீவுப்பகுதிகளில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெடுந்தீவில் மறைபணிபுரிய அருள்திரு G. அருள் நேசன் அடிகளாரும் சென்றுள்ளார்கள்.

இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவிருக்கும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக் கூட்டத்தில் யாழ் ஆயரும் கலந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### பசறைப் பங்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றன. இதில் பங்கு பற்றிய பதினொரு குழுக்களில் அங்கத்துவம் வகிக்கும் சிறுவர்கள் 24 ஊக்குவிப்பாளர் உதவியுடன் தாங்கள் இயேசுவை ஏனைய சிறுவர்களுக்கு எவ்வாறு அறிவிப்போம் என்பதை பாடல்களிலும், நடனங்களிலும், நாடகங்களின் மூலமாக தங்களின் திறமைகளை காண்பித்தார்கள்.

### குடும்ப......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. S. J. இராசநாயகம் அடிகளாரின் தலைமையில் இன்று சிறப்புற நடைபெறுகின்றன. இச்சிறப்புமிக்க செயற்பாட்டிற்கு இப்பணியின் இயக்குனர் அன்று சமர்ப்பித்த பணியறிக்கை சான்று பகருகின்றது என்று கூறினார்.

மேலும், "இப்பணியின் தேவை கடந்த ஆண்டு எமது மண்ணில் இடம்பெற்ற மேய்ப்புப் பணி மகாநாட்டில் மிகக் காத்திரமாக உணரப்பட்டது. அதன் விளைவு இன்று இப்பணிக்கென்று ஒரு நடு நிலையமே உருவாகிவிட்டது, இவ் "அகவொளி" நிலையம் அகங்கள் (உள்ளங்கள், — இல்லங்கள்) அனைத்திற்கும் ஒளி கொடுக்கும் மையமாக அமைந்து எமது மக்களின், அவர்களின் குடும்பங்களின் முழு ஆளுமை வளர்ச்சிக்கு உதவும் உறுதுணை – மையமாகத் திகழ வேண்டும் என்று கூறி தனது வாழ்த்தையும், ஆசியையும் வழங்கி தனது உரையை நிறைவு செய்தார்.

யாழ் ஆயரினால் மங்கல விளக்கேற்றப்பட்டு, அவரின் ஆசீர்வாதத்துடனும், செப வழிபாட்டோடும் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்விற்கு குரு முதல்வர் அருட்கலாநிதி S. J. இம்மானுவேல் அடிகளார் தலைமை வகித்தார்.

இவ் வைபவத்தின் முக்கிய அம்சமாக "குடும்பம் (குழுமம்) — ஓர் உணர்வின் அலகு" (Family — An Emotional Unit) என்ற தலைப்பில் கருத்துச் செறிவுள்ள சிறப்புரை அருட் கலாநிதி S. M, செல்வரட்ணம் அடிகளாரால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வின் நிறைவில் திரு. A. S. அகஸ்ரின் நிலையத்தின் சார்பில் நன்றியுரை வழங்கினார்.

## 1995 பரிசுத்தவார திருவழிபாடுகள்

யாழ் மரியன்னை பேராலயம்

**குருத்தோலை ஞாயிறு : ஏப்ரில் 09**

காலை 6-30 குருத்தோலை மந்திரிப்பு, பவனி
ஆயரின் கூட்டுத் திருப்பலி.
2ஆம், 3ஆம் திருப்பலிகள் காலை 8-00, மாலை 5-30

**பரிசுத்த வாரத்தின் திங்கள் : ஏப்ரில் 10**

மாலை 5-00 திருத்தைலம் மந்திரிக்கும்
ஆயரின் கூட்டுத் திருப்பலி.

**பரிசுத்த வாரத்தின் வியாழன் : ஏப்ரில் 13**

மாலை 5-00 நற்கருணை வழிபாடு.

**திருப்பாடுகளின் வெள்ளி : ஏப்ரில் 14**

காலை 6-00 திருச்சிலுவையின் சிந்தனை
( பேராலய முன்றலில் )
மாலை 3-30 திருப்பாடுகளின் வழிபாடு.
திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து.

**புனித சனி : ஏப்ரில் 15**

காலை 6-00 "சிலுவையில் இயேசுவின் இறுதிக் குரல்".
விவிலிய தியானம்.
ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெறும்.
இரவு 11-30 பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு.

**ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு: ஏப்ரில் 16**

காலை 5-30 திருப்பலி
காலை 6-30 ஆயரின் கூட்டுத் திருப்பலியும்,
பாப்பிறையின் ஆசீரும்.
3ஆம், 4ஆம் திருப்பலிகள்.
காலை 8-00 மாலை 5-30

யாழ். மரியன்னை பேராலயம் பங்குத்தந்தை

## உலக கருத்தரங்குபற்றிய திருத்தந்தையின் கருத்து

சமூக முன்னேற்ற உலக கருத்தரங்கின் நோக்கம் மத சுதந்திரம், சமூகத்தில் குடும்பத்தின் பங்கு, வேலைவாய்ப்புப் போன்றவற்றை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டுமென ஞாயிறு (05-03-95) அன்று மூவேளை செபவேளையில் குறிப்பிட்டார் திருத்தந்தை,

எழ்மைக்கு எதிரான போராட்டத்தை முடிவுக்குக் கொண்டதும், அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், சமூக ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல் போன்ற பிரச்சினைகளுக்குப் பொதுப் பார்வையைத் தேடுவதாக இக் கருத்தரங்கு இருக்குமெனக் கூறிய திருத்தந்தை, மனிதனின் தேவைகளை நிறைவு செய்யும் பயன்தரும் வழிகளைக் கொண்டதாக பொருளாதாரம் இருக்க வேண்டும் என்றார்.

பல நாடுகளில் சரிநிகரற்ற நிலைகள் காணப்படுவதாகக் குறிப்பிட்ட திருத்தந்தை, ஏழை பணக்காரரிடையே விரிந்து வரும் இடைவெளியையும் குறிப்பிட்டார்.

பசி, ஏழ்மை, கல்வியின்மை போன்றவற்றால் ஏழை நாடுகள் துன்புறும் அதேவேளை, பணக்கார நாடுகளிலும் உலகாயுத போக்குகளின் விளைவுகளால் ஏற்பட்ட முரண்பட்ட நிலைகளை காணக்கூடியதென மேலும் குறிப்பிட்டார் திருத்தந்தை.

## பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட்ட ஆயரைச் சந்திக்க திருத்தந்தை இசைவு

பிரான்ஸ் நாட்டில் ஆயர் நிர்வாகப் பதவியிலிருந்து ஜனவரிமாதம் திருப்பீடத்தால் நீக்கப்பட்ட ஆயர் யக்ஜெலோ விண்ணப்பித்தால், திருத்தந்தையும் கர்தினால் பேர்டினோ கன்ரினும் அவரைச் சந்திக்க இசைவு தெரிவித்துள்ளதாக பிரான்சு ஆயர்களின் பேரவையின் அறிக்கை தெரிவிக்கின்றது.

குடும்பக்கட்டுப்பாட்டு விதிகள் குறித்த திருச்சபையின் கருத்துக்களுக்கு முரணான கருத்துக்களை போதித்து வந்ததால் ஜனவரிமாதம் இவர் எவ்றோ (Evreux) மறைமாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்புக்களிலிருந்து திருப்பீடத்தால் நீக்கப்பட்டார்.

பிரான்ஸ் ஆயர்களின் இவ் அறிக்கை வெளியிடப்பட்டவுடன் வானொலி ஒன்றிற்கு பேட்டி அளித்த ஆயர் ஜெலோ, இவ்அழைப்பை தான் ஏற்று தன் விண்ணப்பத்தை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

## அநீதிக்கெதிராய் கண்டனம் தெரிவியுங்கள்

நீதி நிறைந்த ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான நடவடிக்கையில் நற்செய்தி மதிப்பீடுகளை மிகவும் பயனுள்ள முறையில் வழங்குவதற்கு கிறிஸ்தவர்கள் பெரும் பொறுப்பைக் கொண்டுள்ளார்கள் என்று பிரேசில் நாட்டின் மாநில ஆயர்களைச் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை கூறினார்.

வேலைதேடுவோர், தொழில்களில் மனிதாபிமானமற்ற நடவடிக்கையால் துன்புறுவோர், தெருச்சிறுவர், கைவிடப்பட்ட சிறுவர், சிறுவர் விபச்சாரம் போன்ற பிரச்சனைகளையும் கோடிட்டுக் காட்டி அமைதியை குந்தகப்படுத்த முயற்சிக்கும் கூறுகளுக்கெதிராய்க் கண்டனம் தெரிவிக்கவும் அழைப்பு விடுத்தார்.

### புதுக்குடியிருப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும், பொது நிலையினர் கழக உறுப்பினரதும் அயரா முயற்சியின் பயனாக இத் திருக்காட்சி மக்களின் சிந்தனைக்கும் தியானத்திற்கும் விருந்தாகவும் அவர்கள் படும் இன்னல்களுக்கு மருந்தாகவும் அளிக்கப்படுகிறது.

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் உறுப்பினராகிய திரு G. P. பேமினஸ் அவர்களின் நெறியாள்கையிலும், அதன் இயக்குனர் பேராசிரியர் அருள் திரு N. M. சேவியர் அடிகளாரின் மேற்பார்வையிலும் இத் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி இல.360 க்கத்திலுள்ள அச்சகத்தில் 1995ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.